<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 154/2021

வா.சா.1–ராஜலட்சுமி

<u>20.07.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) வேறு வழக்கு எதுவும் வேறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆலந்துார் நீதிமன்றத்தில் அ.வ.எண்.81/2021 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் இந்த தாவாவின் 1ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான் சேர்க்கவில்லை. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கச் சொல்லி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுவும் வழக்கும் ஆலந்துார் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2) இதே நீதிமன்றத்தில் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து அ.வ.எண்.11/2020 தாக்கல் செய்வதற்காக கையொப்பம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் தவறு. நான் கையொப்பம் செய்யவில்லை. அ.வ.எண்.11/2020 விசாரணை நடந்து தீர்ப்பு ஏற்பட்டு உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் வழக்கின் விசாரணைக்கு நீதிமன்றத்திற்கே வரவில்லை. அ.வ.எண்.11/2020ல் என் மாமா கோபாலகிருஷ்ணனுக்கு நானும் 1ம் பிரதிவாதியும் தான் வாரிசுகள் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறு.

3) அ.வ.எண்.11/2020ன் தீர்ப்பு பற்றி எனக்கு தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதி மூலமாக எனக்கு தெரிய வந்தது. அ.வ.எண்.11/2020ன் தீர்ப்பு முழு விசாரணைக்கு பிறகு ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. அதன்பிறகு தான் ஆலந்துார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தவறு. அதற்கு முன்பு தாக்கல் செய்துள்ளேன். இறந்துபோன என் மாமா கோபாலகிருஷ்ணனின் அஸ்தியை அ.வ.எண்.11/2020 தீர்ப்பு நகலை கொடுத்து தான் பெற்றோம் என்றால் இல்லை.

4) கோபாலகிருஷ்ணன் இறந்துபோனது குறித்து சந்தேகம் இருப்பதாக 1ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேன். புகாரின் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து இறந்துபோன என் மாமா கோபாலகிருஷ்ணனின் அஸ்தியை கரைத்தோம் என்றால் இல்லை. இறந்து போன என் மாமா கோபாலகிருஷ்ணனுக்கு குரோம்பேட்டை இந்தியன் வங்கியில் வங்கிக் கணக்கு உள்ளது என்றால் சரிதான்.

5) கோபாலகிருஷ்ணன் இறந்தபிறகு அவருடைய வாரிசுதாரர் என்ற அடிப்படையில் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து அவர் கணக்கில் இ,ருந்த பணத்தை எடுத்தோம் அதில் ஒரு தொகை என் வங்கிக் கணக்கு வந்தது என்றால் நான் நாமினி என்ற முறையில் என் கணக்கிற்கு பணம் வந்தது. நான் எவ்வாறு கையொப்பம் செய்வேன் என்றால் ஆங்கிலத்தில் மட்டும் செய்வேன். தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் இறந்துபோன கோபாலகிருஷ்ணனுக்கு முறையான வாரிசுதாரர்கள் என்றால் தவறு.

2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.வ.எண்.11/2020ல் நானும் தரப்பினராக இருந்து கையொப்பம் செய்து வழக்கு நடந்தது என்றால் தவறு. நான் தரப்பினராக இல்லை. அ.வ.எண்.11/2020ல் உள்ள என் கையொப்பமும் இந்த வழக்கில் நான் செய்துள்ள கையொப்பமும் வெவ்வேறு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதை பொறுத்து கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை.

நானும் 1ம் பிரதிவாதியும் சரியாக கையொப்பம் செய்து வழக்கு தாக்ல செய்து முழு விசாரணைக்கு பின்பு இதே நீதிமன்றம் அ.வ.எண்.11/2020 தீர்ப்பு ஏற்பட்டு உட்ளளது என்றால் சரியல்ல அந்த தீர்ப்பின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 9.10.2020ம் தேதி இறந்துபோன கோபாலகிருஷ்ணனுக்கு

வாரிசு சான்றிதழ் வழங்கி உள்ளார் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ணனின் சொத்துக்களை அபகரிக்க பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.